# கு₃ணபரீவாஹம்
## (வாக₃ம்ருதவர்ஷீ வேளுக்குடி ஸ்ரீ.உ.வே.வரதாசார்யஸ்வாமி)

ஸ்ரீபராஶரபட்டர் பகவதவதாரங்களை ''கு₃ணபரீவாஹம்'' என்ற சொல்லால் அநுபவிக்கிறார். ''கு₃ணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்'' என்று அவர் திருவாக்கு. ''ஜலோச்ச்₂வாஸா: பரீவாஹா:'' என்று அமரகோசமும், ''பூரோத்பீடே₃ தடாகஸ்ய பரீவாஹ: ப்ரதிக்ரியா'' என்று உத்தரராமசரிதமும் கூறுகிறது.

''தடாகாந்தே ப்ரவ்ருத்₃த₄ ஜலநிர்க்க₃மாய க்ருதமார்க்க₃: பரீவாஹ:'' என்று அவ்விடத்திய வ்யாக்யானம்.

பகவான் ஸமஸ்த கல்யாணகுணபரிபூர்ணன். அவனிடத்தில் நிரம்பிய திருக்கல்யாண குணங்களின் நிர்க்கமமார்க்கமே (போக்குவீடே) அவதாரம் எனப்படுகிறது. ஏரி தீர்த்த பூர்ணமானவாறே ஜலம் கலிங்கு (மதகு) வழியாகப் புறப்பட்டால் ஏரி தரிக்கும். அன்றேல் ஏரி உடைந்துவிடும். தரிக்காது என்றபடி. அவ்வண்ணமே பரனுடைய கல்யாண குணங்களின் கலிங்கு (மதகு) அவதாரம் எனப்படுகிறது.

ஸ்ரீராமாநுசமதத்தின் முக்யார்த்தங்களில் இதுவும் ஒன்று: ''பரமாத்ம ஸ்வரூபம் ஸத்யம் நித்யம்; அவ்வோபாதி அவன் கல்யாண குணங்களும் ஸத்யங்களாயும் நித்யங்களாயும் உள்ளன'' என்று.

''உயர்வற உயர் நலம் உடையவன்'' என்று நம்மாழ்வாரும், ''ஸ்வாப₄ாவிக அநவதி₄காதிஶய அஸங்க்₂யேய கு₃ணக₃ண:'' என்று ஆளவந்தாரும், ''தே₃ாஷோபத₄ாவதி₄ ஸமாதிஶயாந ஸங்க்₂யா நிர்லேப மங்க₃ள கு₃ணௌக₄து₃க₄ா:'' என்று பட்டரும் அருளிச்செய்திருப்பது ப்ரஸித்தம்.

இக்குணங்களின் பரீவாஹமே அவதாரமாகும். பகவந்நாமங்களுள் ''அநந்தன்'' என்பதொன்று. ''நாந்தம் கு₃ணாநாம் க₃ச்ச₂ந்தி தேநாநந்தோऽயம் உச்யதே'' என்கிறபடியே கல்யாண குணங்களுக்கு அந்தமில்லை என்றதாயிற்று. ''ஈறில வண்புகழ்'' ''உலப்பில் கீர்த்தி'' என்றருளிச்செய்தார் நம்மாழ்வார்.

கல்யாண குணங்களுக்கு அந்தமில்லாதாப்போலே குணபரீவாஹங்களான அவதாரங்களுக்கும் அந்தமில்லை. ''அஜாயமாந: ப₃ஹுதா₄ விஜாயதே'' என்று வேதமும், ''ப₃ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி'' என்று வேத்யனும், ''சன்மம் பலபல செய்து'' என்று வைதிக ஸார்வபௌமரான ஆழ்வாரும் அருளிச் செய்திருப்பதை உற்று நோக்குங்கால் இது தேறுகிறது—''பகவதவதாரங்களை இவ்வளவு என்று கணக்கிட முடியாது'' என்று. ஆயினும் பகவதவதாரங்களுள் ஓர் பத்தவதாரங்களை மஹர்ஷிகளும் ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் அடிக்கடி அநுபவிக்கிறார்கள். ''மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னும் இராமனாய்த்

தானைய்ப் பின்னுமிராமனைய்த் தாமோதரனைய்க் கற்கியுமானைன்'' என்றும், ''ஏன மீனைமையோடு அரியும் சிறு குறளுமாய்த் தானுமாய தரணித் தலைவன்'' என்றும் கலியன் அருளிச்செய்தாரிறே.

தசாவதாரங்களுள் இராமாவதாரம் மூன்றாக உள்ளது. அதனைப் பெரியாழ் வார் ''தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய் அரியாய்க் குறளாய், மூவுருவில் இராமனைய்க் கண்ணனைய்க் கற்கியாய்'' என்ற பாசுரத்திலே ''மூவுருவில் இராமனைய்'' என்று குறிப்பிட்டருளினார். கலியன் அங்ஙனருளிச் செய்யாதே தசரத ராமாவதாரத்தின் ப்ராதாந்யத்தைப்பற்ற ''தானைய்'' ''தானுமாய'' என்று அருளிச் செய்துள்ளார். பெரியவாச்சான்பிள்ளையும் '' 'தானுமாய' – (கலி 5–4–8) – 'முன்னுமிராமனைய்த் தானைய்ப் பின்னுமிராமனைய்' (கலி 8–8–10) என்னக்கடவதிறே. அல்லாதவிடங்கள் ஶக்த்யேகதேஶம். அவன்தானே வந்தான் என்னக்கடவதிறே ராமாவதாரத்தை'' என்றும், ''தானைய் – (கலி 8–8–10) – மத்ஸ்யாதி தசாவதாரங்களையும் பண்ணி ஜகத்ரக்ஷணம் பண்ணின தன்னை'' என்றும் வ்யாக்யாநித்தருளினார். ''வேத₃ாநுத்₃த₄ரதே ஜக₃ந்நிவஹதே பூ₄கே₃ாளம் உத்₃பி₃ப்₄ரதே தைத்₃யம் த₃ாரயதே ப₃லிம் ச₂லயதே க்ஷத்ரக்ஷயம் குர்வதே பௌலஸ்த்யம் ஜயதே ஹலம் கலயதே காருண்யம் ஆதந்வதே ம்லேச்ச₂ாந் மூர்ச்ச₂யதே த₃ஶாக்ருதிக்ருதே க்ருஷ்ணாய துப்₄யம் நம:'' என்று ஜயதேவ கவி கீதகோவிந்த காவ்யாரம்பத்தில் இப்புடையிலே பாடியுள்ளார். அவர் கூறியது ஸ்ரீக்ருஷ்ணாவதார ப்ரதாந்யத்தைக் கொண்டதாகும். ஆழ்வார் ஸ்ரீராமாவதார ப்ராதாந்யத்தைத் திருவுள்ளம்பற்றி இவ்வாறு அருளிச்செய்தார். கல்யாணகுணைபி ராமனிறே ஸ்ரீராமன்.

ஸ்ரீக்ருஷ்ணாவதார லீலைகளில் சிலவற்றைக் காண்கிறபோது பண்டிதர்களுக்கு போக்யமாயிருக்குமல்லது பாமரர்களுக்கு போக்யமாயிராது – பண்டித பாமர விபாகமற ஈடுபடுத்தும் அவதாரம் ஸ்ரீராமாவதாரம் ஒன்றே யாகும். இது தன்னை ஜயதேவ கவி ப்ரஸந்நராகவ நாடகத்தில்

''நட: – கத₂ம் புநரமீ கவய: ஸர்வே ராமசந்த்₃ரமேவ வர்ணயந்தி? ஸூத்ரத₄ார: – நாயம் கவீநாம் தோ₃ஷ: – யத: ஸ்வஸூக்தீநாம் பாத்ரம் ரகு₄திலக மேகம் கலயதாம் கவீநாம் கோ தோ₃ஷ: ஸ து கு₃ணக₃ணாநாம் அவகு₃ண:। யதோ₃தை: நிஶ்ஶேஷை: அபரகு₃ணலுப்₃தை₄ரிவ ஜக₃த்யஸாவேகஶ்சக்ரே ஸததஸுக₂ஸம்வாஸவஸதி:॥'' என்று கூறியுள்ளார். ஸ்ரீராமன் குணைபிராமன். அவன் கல்யாணகுணங்களை ஈண்டு அநுபவிப்போம்.

ஸ்ரீராமாயணைரம்பத்தில் ஸங்க்ஷேப ராமாயணம் உளது. ஆங்கே ஸ்ரீவால்மீகி நாரத ஸம்வாதம் உள்ளது. ஸ்ரீவால்மீகி தான் ப்ரஶ்நம் தொடங்கும்போதே ''கோநு அஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே'' என்று 'இக்காலத்தில் இத்தேசத்தில் எவன் குணவான்'' என்றே வினவுகிறார். வால்மீகி ராமாயணைந்தத்

தில் ''அப்$_4$யஷிஞ்சந்நரவ்யாக்$_4$ரம்' என்று உள்ளது. – இந்த உபக்ரம உபஸம்ஹாரங்களான ஆத்யந்தங்களை நோக்கின் இது புலனாகிறது: ''மற்றைய அரசர்களுக்குப்போல் ஸ்ரீராமனுக்கும் கோஸல ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் அன்று – குண ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகமே நடந்தது,'' என்று தெளிவாகிறது. ஸ்ரீராமன் ராஜ்ய வாஸத்தைத் துறந்து வநவாஸத்தை மேற்கொண்டானாகையால் அவன் கல்யாண குணங்கள் வெளிப்பட்டன. இது தன்னைக் கம்பர்

''அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறனும்
துரக்க நல்லருள் துரந்தனள் தூமொழி மடமான்
இரக்கமின்மை யன்றோ இன்று இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல் புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே'' என்று கூறியுள்ளார்.

ஸ்ரீவேதவ்யாஸரும் தாம் தொகுத்த ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமாத்யாயத்தில் ''பரர்த்தி$_4$: பரமஸ்பஷ்ட:'' என்று தொடங்கி ஸ்ரீராம கல்யாண குணங்களைப் பலபல திருநாமங்களால் காட்டியருளினர். ஸ்ரீபராஶர பட்டரும் அவ்விடத்து ப$_4$க$_3$வத்$_3$கு$_3$ணத$_3$ர்ப்பணமாகிய பாஷ்யத்தில் விஶதமாக விவரித்தருளினர்.

பகவத் குணங்கள் அநந்தங்களாயினும் அவை இரு வகைகளாகக் கூறத்தக்கவையாம். பரத்வம் (மேன்மை) ஸௌலப்யம் (எளிமை) என்று இரு வர்க்கங்களாகப் பிரிக்கப்படும். நம் தர்ஶநத்தில் ஆத்மாக்கள் அஸங்க்யேயர்கள். ''ஒண்பொருள் ஈறில'' என்று அருளிச்செய்தருளினர் நம்மாழ்வார். ஆயினும் ''ஆத்மா த்ரிவித$_4$: ப$_3$த்$_3$த$_4$முக்தநித்யபே$_4$த$_3$ாத்'' என்று எண்ணில் அடங்காத ஜீவர்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனரே. இவ்விடத்தில் ''ஸர்வஜ்ஞ பட்டன் ஸ்ரீ பராஶரபட்டர் ஐதிஹ்யத்தை'' நினைவிற்கொள்க. கைப்பிடிக்குள் அடங்கிய மணலை ஓராயிரம் ஈராயிரம் என்று எண்ணவியலாதாயினும் ''பிடிமணல்'' என்று அடக்கிவிட இயலும். அவ்வோபாதி பகவதநந்த கல்யாணகுணங்களும் வர்க்கத்வயத்திலே அடங்கும்.

ஸ்ரீராம ஸௌலப்யத்தையும், ஸ்ரீராம பரத்வத்தையும் ஈண்டு அநுபவிப்போம்.

''கீழ்மகன் தலைமகனுக்கு ஸம ஸகாவாய்'' என்று தொடங்கி ஆசார்ய ஹ்ருதயத்திலே நாயனார் ஸ்ரீராம ஸௌஶீல்யத்தை அநுபவித்துள்ளார். ''ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது'' என்று இதுதன்னைக் கலியன் அநுபவித்துள்ளார். ''ஸ்ரீராமாவதார தத்துவமே ஸௌஶீல்யம்'' என்றருளிச்செய்தார் ஸ்ரீபராஶரபட்டர் ப$_4$க$_3$வத்$_3$கு$_3$ண த$_3$ர்ப்பணத்திலே. ஸ்ரீராமாயணத்திலே ''க: கு$_3$ணவாந்'' என்ற முதற்கேள்விக்கே இதுபொருள் என்பர் நம்பெரியோர். ''வஶீ வத$_3$ாந்ய: கு$_3$ணவாந்'' என்று பரமாசார்யரான ஆளவந்தாரும் இந்த ஸௌஶீல்ய குணத்தையே குணஶப்தத்தால் காட்டியருளினர். ''மஹதோ மந்தை$_3$: ஸஹ நீரந்த்$_4$ரேண ஸம்ஶ்லேஷ: ஸௌஶீல்யம்'' என்று நிஷ்கர்ஷித்துள்ளனர்.

கங்காகூலத்திலே ஸ்ரீ குஹப்பெருமாளுடனும், பம்பாதீரத்திலே மஹாராஜரான ஸுக்ரீவனுடனும், கடற்கரையிலே ஸ்ரீவிபீஷணாழ்வானுடனும் கலந்தான் ஸுஶீலனான ஸ்ரீராமன் என்றபடி.

வேடன் குரங்கு இராக்கதன் என்ற அவர்கள் நைச்யத்தையும், நித்யஸூரி நாதத்வமாகிற தன் மேன்மையையும் பாராதே அவர்களோடே கலந்தான் சக்ரவர்த்தித் திருமகன். "விபீஷணனை ராவணன் 'குலபாம்ஸநன்' என்றான், பெருமாள் இக்ஷ்வாகு வம்ஶ்யனாக நினைத்து வார்த்தையருளிச்செய்தார்" என்று பிள்ளையுலகாரியனும் ஸ்ரீவசநபூஷணத்திலே அருளிச்செய்தார். இவ்வளவு எளிமையைக் காட்டவந்த இடந்தன்னிலே பரனை விட்டுப் பிரியாத பரத்வமும் வெளியாகிறது. மதுரா நகரத்திலே ஸ்ரீக்ருஷ்ணன் ஸ்ரீமாலாகாரர் திருமாளிகை நாடி எழுந்தருளி, அவரை அநுக்ரஹித்த காலத்தில் "ப்ரஸாத$_3$ பரமௌ நாதௌ$_2$ மம கே$_3$ஹமுபாக$_3$தௌ" என்றாரிறே ஸ்ரீமாலாகாரர். "ப்ரஸாதமே விஞ்சியிருக்கிறது – நாதத்வமும் உண்டு – அது ஆஶ்ரயமான பகவத் விஷயத்தைப் பிரியாதாகையால்" என்றாரிறே.

அவ்வோபாதி ஸ்ரீராமன் ஸௌலப்ய ஸௌஶீல்யங்களைக் காட்டினானாயினும் பரத்வமும் அவ்வாச்ரயத்திலே கிடப்பதொன்றாகையால் அதுவும் தன்னடையே பீறிட்டு ப்ரகாஶிக்கிறது.

இவ்விஷயந்தன்னை அதிமாநுஷஸ்தவத்திலே கூரத்தாழ்வான் "ப்ருச்ச$_2$ாமி கிஞ்சந" என்ற ஶ்லோகத்தாலும், "மாநுஷ்யகம் சரிதம்" என்ற ஶ்லோகத்தாலும் "அப்$_3$தி$_4$ம் ந தேரித$_2$" என்ற ஶ்லோகத்தாலும் அநுபவித்துள்ளார்.

மநுஷ்ய குலத்திலே அவதரித்தவன் ஒரு பக்ஷிக்கு மோக்ஷம் தந்தருள்வதும், குரங்கு கொணர்ந்த மலைகளாலே கடலை அடைப்பதும், இராவணன் உயிருடன் இருக்கும்போதே அக்கரை செல்வதற்கு முன்பேயே இக்கரையில் ராவணாநுஜனான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு ஸ்ரீலங்காராஜ்ய பட்டாபிஷேகம் நடத்திவைப்பதும் பரனுடைய பரத்வத்தைக் காட்டிக்கொடுக்குமவையன்றோ.

இப்படிப்பட்ட பரத்வ ஸௌலப்யங்களாகிற குணஸாம்ராஜ்ய ப்ராப்தியைப் பெற்ற ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார் ஸ்ரீவஸிஷ்டபகவான். பகவானுடைய பரத்வ ஸௌலப்யங்களுக்கு நிதா$_3$நம் (காரணம்) ஸ்ரீமத்த்வம். "மாமாயன் மாதவன் வைகுந்தன்" என்று ஆண்டாளும், "லோகநாத$_2$: மாத$_4$வ: ப$_4$க்தவத்ஸல:" என்று வ்யாஸரும் அருளிச்செய்தார்களிறே. ஆகையாலிறே "ஸஹஸீதம் ந்யவேஶயத்" என்றார் ஸ்ரீவால்மீகி பகவானும்.